## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் (AASL) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

என்னுடைய அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயங்களை வலியுறுத்துதல்

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 30 மற்றும் நிதி அமைச்சால் வழங்கப்பட்ட "இலங்கையின் வெளிநாட்டு அரச கடன் கொள்கையின் சேவை தொடர்பான இடைகால கொள்கை" மீதான 2022/04/12 ஆந் திகதிய சுற்றிக்கை என்பவற்றிற்கமைய நான் கவனத்தை ஈர்க்கின்றேன். அரசாங்க நிறுவனங்களால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் தீர்ப்பனவு செய்வதற்கு நெறிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கை வழங்கியதிலிருந்து JICA கடன் கைதவிர்ப்புகளை நிறுத்தியதிலிருந்து செயற்திட்டத்தை தொருவதை ஒப்பந்தகாரர் நிாகரித்தைமையால் இது BIADP கட்டம் II, பகுதி 2 செயற்திட்டத்தின் நிர்மாணங்களை தொடருவதை பாதகமாக பாதித்திருந்தது.

இருந்தாலும் நிதி அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை கம்பனி போதிய நிதிகளை கொண்டிருந்தமையால் கடன் திருப்பிச் செலுத்தல்களை செய்வதற்கும் செயற்திட்டத்தை தொடருவதற்கும் AASL நிதி இயலளவை கொண்டிருந்தது என கம்பனி அமைச்சிற்கு தொடர்புபடுத்தியது. IMF கடன் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டம் காரணமாக கடன் திருப்பிச்

செலுத்தல் தொடருவதை ஒப்புக் கொண்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 09 இல் AASL உடன் ஒப்பந்தகாரர் ரைசகி கூட்டுத்தாபனம் ஒப்பந்தத்தை முறையாக இடைநிறுத்தியது.

ஒப்பந்தம் இடைநிறுத்திய பின்னர் AASL ஆனது நிதியளித்தலை JICA திரும்ப தொடங்கும் வரை பயன்படுத்துகின்ற அதன் சொந்த பொருட்களை ஆபத்தான பாதுகாப்பு வேலைகள் கண்டுபிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ரூபா 3,677 மில்லியன் பெறுமதியான இரண்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒன்று பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஏனையது 2024 இறுதியளவில் 73 சதவீதமான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ரைசகி கூட்டுத்தாபனத்திற்கான இடைநிறுத்தல் கொடுப்பனவு நிலுவையாக இருக்கின்ற மேலதிக கிரயம் தவிர ஜ.யென் 444.5 மில்லியன் மற்றும் ரூபா 1,486.8 மில்லியன் தொகையாகும். AASL ஆனது ரூபா 3,920 மில்லியன் பெறுமதியான உள்நாட்டுப் பொருட்களை பெற்றிருந்ததுடன் ரூபா 720 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு இருப்பு திட்டங்களை அனுமதித்திருந்தது. அதேநேரம் ஒப்பந்தகாரர் சபையுடன் தகாராறு ஏற்பட வேண்டியிருப்பினும் இந்த பாதுகாப்பு பொறுப்பிற்காக 2024 நிதிக்கூற்றுக்களில் எவ்வித ஏற்பாடுகளும் செய்திருக்கவில்லை.

இடைநிறுத்தல் கொடுப்பனவு தீர்ப்பனவின் பின்னர் மிகுதியாக இருக்கின்ற JICA கடன் பொதி ஏ இன் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு போதாதிருந்தது. JICA இற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் AASL இற்கும் இடையில் நிதியளித்தல் பேச்சுவார்த்தைகள் செயற்பாட்டில் உள்ளன. பூர்த்தியாக்கல் கட்டத்திற்காக (பொதி”ஏ1”) நிதி உதவியளிப்பதற்கு 2024 நவம்பர் 11 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டதுடன் ஆலோசனை உடன்படிக்கைக்கான திருத்த இல. 3 2024 நவம்பர் 1 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கேள்விகோரல் 2024 செப்தெம்பர் 1 இல் தொடங்கப்பட்டு 2025 மார்ச் 25 இற்கு இரண்டு தடவை நீடிக்கப்பட்டது. தற்போது கேள்வி மதிப்பாய்வு நடைமுறையில் உள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டிருந்தது.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) 36 ஆம் பந்தியின் பிரகாரம், PPE விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும் போது நிறுவனம் அதற்கு சொந்தமாக இருந்த சொத்தக்களின் வகுதிகளை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது ரூபா 212.7 மில்லியன் பெறுமதியான 15 கட்டிடங்கள், ரூபா 84.8 மில்லியன் பெறுமதியான 44 வாகனங்கள் ரூபா 18.5 மில்லியன் பெறுமதியான கெங்கர்கள் ரூபா 6,900 மில்லியன் பெறுமதியான பொறி | 15 கட்டிடங்களின் - மீள்மதிப்பீடு ஏற்கனவே செய்யப்பட்டிருந்ததுடன் FY 2025 இல் மீள்மதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் பதியப்படும். பின்டுறுதலாகலாவில் சகல கட்டிடங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நாங்கள் தற்போது கணக்கீட்டு பதிவுகளில் நாளதுவரையாக்கப்பட்ட பெறுமதிகளை பதிகின்ற செயற்பாட்டில் உள்ளளோம் மேலும், மதிப்பாய்வு திணைக்களம் BIA இல் மலசல கூடங்களை மீள்மதிப்பு செய்திருக்கவில்லை. மேலும் கட்டிடங்கள் மற்றும் வாகன வகுதி சொத்துக்களிற்காக மாத்திரம் மீள்மதிப்பீட்டை | LKAS 16 இன் வேண்டுகையுடன் இணங்க வேண்டப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் இயந்திரங்கள் என்பன PPE மீள்மதிப்பீடு செய்யப்படும் போது உள்ளடக்கப்பட்டிருந்தது. | மேற்கொண்டிருந்தோம். சகல ஏனைய சொத்து வகுதிகளின் சொத்து பயன்பாட்டு காலத்தை மீளாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப் பட்டிருந்ததுடன் இதன்படி சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | LKAS 16 இன் 16(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த நோக்கங்களிற்காக சொத்துக்களை தயாரிக்கும் போது நேரடியாக பங்களிப்பு செய்த கிரயங்கள் மூலதனமாக்கப்பட ஆடியும். மேலும், LKAS 16 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடற்ற அபிவிருத்தி காலபப் பகுதி நீடிக்கப்பட்ட போது கடன்படல் கிரயங்களின் மூலதனமாக்கலின் நிறுத்தலை வேண்டியிருந்தது.<br>எவ்வாறாயினும், அதற்கு முரணாக நிறுத்தப்பட்ட காலப்பகுதியின் பொது PMU உத்தியோகத்தர் சம்பளங்கள் மற்றும் கடன் வட்டிகள் முறையே ரூபா 7.5 மில்லியன் மற்றும் ரூபா 43.8 மில்லியன் மூலதன நடைமுறை வெலையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டம் செயற்பாடற்ற காலப் பகுதியின் பொது PMU சம்பளங்கள் சபை அனுமதியுடன் P மற்றும் L இற்கு மாற்றப்பட்டிருந்தது.<br>செயற்திட்டமானது 2024 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் PMU ஆல் உறுதிப்படுத்தப்பட்டவாறு 2024 ஆகஸ்ட் மாத்ததில் திரும்ப செயற்பட்டிருந்தது. PMU சம்பளங்கள் WIP இல் பதியப்பட்டிருந்தது. | LKAS 16 மற்றும் LKAS 23 இன் வேண்டுகையுடன் இணங்க வேண்டப்பட்டுள்ளது. |

### 1.6.2. கணக்கீட்டக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகளின் சட்டரீதியான உரிமையாண்மையை இன்னமும் கம்பனிக்கு மாற்றப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காணிகளாக ரூபா 671.1 மில்லியன் பெறுமதி உள்ளடக்கியிருந்தது. | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2050/38 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தல் மூலம் காணிகள் வெளிப்படுத்தப்படுகின்றதுடன் அவற்றின் பட்டியல் II இலுள்ள குறிப்பிடப்பட்ட விமான நிலையங்கள் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையால் உடமையாக்கப்பபடடிருந்தது.<br>இருந்தபொதிலும், காணிகளின் சட்ட உரிமைக்கான முறையான தீர்வினை கண்டிருந்தும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு செயலாளருடன் தொடர்புகொண்டு முறையான நடவடிக்கை எடுக்கப்படும். | PPE இன் கீழ் பதியபபட்ட சகல சொத்துக்களும் கம்பனியால் சட்டரீதியாக உடமையாக்கப்பட்டதென உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 ஆம் ஆண்டு கணிப்பீட்டுச் சபை அறிக்கை பிரகாரம் (ரூபா 529.9 மில்லியன் முற்கொண்டுவரும் பெறுமதி)) ரூபா 1,952 மில்லியன் கிரயத்திலான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இருக்கவில்லை. எவ்வாறாயினும் வேண்டப்பட்ட சீராக்கல்கள் கம்பனியின் கணக்கேடுகளில் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட PPE அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024.12.31 இல் உள்ளவாறு செயற்படுத்தப்பட்ட நிலையான சொத்து பௌதீக மெய்மையாய்வு செயற்பாட்டில் உள்ளதுடன் 2025.6.30 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. ஒருவேளை ரூபா 1,998 மில்லியன் மீளாய்வுசெய்யப்பட்டது.மொத்த பிரிவுகளிலும் வகைப்படுத்தல் பிரச்சனை இருந்ததுடன் பௌதீக மெய்மையாய்வின் பொது அந்த சகல சொத்துக்களின் முழுமையாக மேவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் பௌதீக மெய்மையாய்வு முடிவடைந்து அத்தகைய பௌதீக ரீதியாக இல்லதா சொத்துக்கள் தேவையான அறிவுறுத்தல்களிற்காக AMC இற்கு முன்வைக்கப்பட வேண்டியிருந்தது. | கம்பனியானது கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் இனங்காணப்பட்ட விததியாசங்களை புலனாய்வு செய்து இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் நிதிப் பதிவேடுகளில் முறையாக கணக்கீட்டுச் சீராக்கல் செய்யப்படவும் வேண்டும். |
| (இ) | ரூபா 1,403.9 மில்லியன் தொகையான மீளாய்வாண்டின் போது றெப்பட்ட பொருட்கள் உரிய கணக்குகளிற்கு மாற்றப்படாமல் இடைப்போக்கிலுள்ள பொருட்களாக தவறாக காட்டப்பட்டிருந்தது. | சில விடயங்கள் பெறப்பட்டதுடன் GRNs வழங்கப்பட்டது. சொத்துக்களின் பரீட்சார்த்தம் இன்னமும் செயற்பாட்டில் உள்ளமையால் அவை WIP இற்கு மாற்றப்பட்டது. இந்த விடயம் உரிய பிரிவுகளால் முகங்கொடுத்த நடைமுறை பிரச்சனைகளை கருத்திற்கொண்டு கொள்கை நெறிப்படுத்தலை செய்யும் நோக்கில் AMC இற்கு தொடர்புபடுத்தப்படும். | கம்பனியானது இருப்புகள் பெறப்பட்டதாக அவர்களுடைய உள்ளபடியான நிலையை முறையாக பெருளிருப்பு கணக்கிற்கு வெளிப்படுத்துவதற்கு “இடைப்போக்கிலுள்ள பொருட்களை” மீள வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஜப்பான் அரசாங்கத்தால் AASL இற்கு நன்கொடையளிக்கப்பட்ட அண்ணளாக ரூபா 52.1 மில்லியன் மொத்தமான முழுமையாக ஒதுக்கப்பட்ட அம்புலன்ஸ் மற்றும் குப்பை அகற்றல் வாகனம் என்பவற்றின் கிரயம் மீளாய்வாண்டின் போது கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரு அம்புலன்ஸ் மாத்திரம் பெறப்பட்டது. ஏனைய அம்புலன்ஸ்கள் துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது. 2025 இல் விமான நிலைய முகாமைத்துவம் மற்றும் எந்திரவியல் பிரிவிற்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>நிலைய முகாமைத்துவ பிரிவு (மருத்துவ நிலையம்) IOM இடமிருந்து முழுமையாக உபகரணப்படுத்திய அம்புலன்ஸ் வாகனங்களின் (ரோயாட்டா உற்பத்தி) நன்கொடை பெற்றிருந்ததுடன் CIF SL - 35,115 U$ +வரி மற்றும் VAT இற்காக 2024 நவம்பர் 29 இல் ஜப்பான் அரசாங்கத்தால் நன்கொடை அளிக்கப்பட்டது. | கம்பனியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக (PPE) நன்கொடையளிக்கப்பட்ட சொத்துக்களை கருதப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலையான வைப்பு முதலீடு ரூபா 100,970 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் வங்கி உறுதிப் படுத்தலின் பிரகாரம் இது ரூபா 100,677.3 மில்லியனாக இருந்தது. எனவே, இரண்டு மீதிகளிற்கும் இடையில் ரூபா 292.7 மில்லியன் வித்தியாசம் இருந்ததுடன் இரண்டு மீதிகளையும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | BOC ஏற்கனவே பின்தொடர் நடவடிக்கையை எடுத்திருந்தது. 2025.2.7 இல் BOC உடன் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் 2025.5.20 இல் இறுதி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. | கம்பனியானது நிதிக் கூற்றுக்களை இறுதியாக்க முன்னர் புலனாய்வு செய்து இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் அவசியமான கணக்கீட்டு சீராக்கல்களும் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2017 இற்கும் 2024 இற்கும் இடையில் சுவீகரிக்கப்பட் ரூபா 1 மில்லியன் பெறுமதியான ஐம்பது சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 943,622 பெறுமதியான 40 சொத்துக்கள் 2024 இல் சுவீகரிக்கப்பட்டது. அதேநேரம் ரூபா 33,400 பெறுமதியான 7 சொத்துக்கள் 2023 இல் சுவீகரிக்கப்பட்டிருந்தது. | இந்தப் பட்டியல் ஏதாவது வேவைகளிற்கு இருந்த பல பொருளிருப்பு விடயங்கள் பதிவழிக்க வெண்டியிருந்தது. நாங்கள் சொத்துக்கள் மற்றும் பொருளிப்புக்களை வகுதிப் படுத்தவதற்காக ரூபா 20,000 இல் எல்லையை தீர்மானிததுடன் விடயங்களின் தன்மையையும் கருத்திற் கொண்டிருந்தோம். மேற்குறிப்பிட்ட ரூபா 20,000 இற்குரிய விடயங்கள் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் சொத்து பதிவேட்டிற்கு திரும்ப எடுக்கப்படும். ஏனைய விடயங்கள் பொருளிருப்பாக கருதப்படும். | 2023 இற்கும் 2024 இற்கும் இடையில் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் முன்னரான பதிவழிப்பு மீது விரிவான புலனாய்வு நடாத்தப்பட வேண்டியதுடன அந்த முறையான ஆவணங்கள், தீர்மானம் மற்றும் கணக்களிப்பு என்பன உருவாக்கப்படட வேண்டும். |
| (எ) | கம்பனியினுடைய நடைமுறை பிரகாரம் மீண்டெழும் செலவினத் தன்மையாக இருந்த ரூபா 2.2 மில்லியன் மொத்தம் இலாம் மற்றும் நட்டக்கணக்கில் சாட்டுதல் செய்யப்படாமல் நடைமுறை வேலையின் ஒரு பகுதியாக தவறாக பதியப்பட்டிருந்தது. | பயன்பாட்டாளர் ஆரம்ப கட்டத்தில் சில செலவினங்களின் சரியான தன்மையை இனங்காண்பதற்கு இயலாதிருந்தது. | கம்பனியானது பிரயோகிக்கின்ற கணக்கீட்டு நியமங்களிறக்மைய இலாப நட்ட கணக்கிற்கு நடைபெறும் வேலையை மீள வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மெதுவாக நகரும் பொருளிருப்பிற்காக ரூபா 82.4 மில்லியன் படிகள் ஒதுக்கப் பட்டிருந்ததுடன் 2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஊடாக இந்த அதே தொகை படிகள் மாற்றமடையாது முற்கொண்டு வரப்பட்டிருந்தது. தற்போதைய பொருளிருப்பு நிலை மற்றும் காலப் பகுப்பாய்வு | தற்போது முறைமை பொருளிருப்பின் காலப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு வசதியற்றிருந்தது. எவ்வாறாயினும் இந்த பிரச்சனை ஏற்கனவே வருடாந்த பராமரிப்பு ஒப்பபந்தத்தின் கீழ் நுசுனு ஆதரவு குழுவிற்கு அறிக்கையிட்ருந்ததுடன் விடயம் அவர்களுடைய ஆய்வின் கீழ் உள்ளது. | படிகளை மீள் மதிப்பீடு செய்வதற்கும் அவை உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தததை உறுதிப்படுத்தவதற்கு அவசியமானதால் நிதிக் கூற்றுக்களை சீராக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் எவ்வித மீள்மதிப்பீடு செய்யப்படாமல் 2021 இன் படிகையே தொடர்ந்தும் பயன்படுத்தவதுடன 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதன் இணக்கப்பாடு பற்றி கவலைகள் எழுந்திருந்தது. | | |
| (ஐ) | கந்தப் பொல நிலையம் பெறுகின்ற ரூபா 5.1 மில்லியனான மாஸ்ரஸ், அன்டனா மற்றும் பல்துறை கூப்பர் என்பவற்றிற்கான ஒளியூட்டல் மற்றும் மேற்பரப்பு பாதுகாப்பு முறைமை உள்ளடக்கியவை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வின் போது இந்த சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | HF பெறுகை நிலையம் அரசாங்க கட்டளையுடன் தலங்காமவிலிருந்து கந்தபொலவிற்கு மாற்றப் பட்டிருந்தமையால் ஒளியூட்டல் மற்றும் மேற்பரப்பு பாதுகாப்பு முறைமையின் ஒரு பகுதி மாத்திரமே கந்தபொலவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் கூப்பர் நிலக்கீழ் பகுதி மற்றும் றொட்ஸ் உள்ளடங்க மிகுதியாக இருக்கின்ற பகுதி நடைமுறைக்கு சாத்தியமற்றதால் இடமாற்ற முடியாதிருந்தது. AMC மற்றும் 2025 மார்ச் 26 இல் எடுக்கப்பட்ட 068/2025 ஆம் இலக்க சபை தீர்மானத்தினை சபை நெறிப்படுத்தல்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.<br>(i) 2025 மார்ச் மாதத்தில் மொத்த பெறுமதியின் 76 சதவீதமாக உள்ள ரூபா 3,878,575.27 பதிவழித்தல்<br>(ii) 2025 மார்ச் மாதத்தில் ERP முறைமையில் மீள்மதிப்பீட்டு சீராக்கலாக ரூபா 1,222,677.27 பெறுமதி உள்ளது. | சொத்துப் பதிவேடுகளின் உண்மைத்த தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையால் பதியப்பட்ட செலுத்தப்பட வேண்டியவைக்கும் AASL ஆல் பதியப்பட்ட பெற வேண்டியவைக்கும் இடையிலான பயணிகள் உள்வருகை வரியில் ரூபா 4,697.1 மில்லியன் இனங் காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இரண்டு மீதிகளையும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | CAASl அறிக்கும் பொது மாத்திரம் வருமானம் அட்டுறு அடிப்படையில் பதியப்படுவதுடன் AASl இற்கு சேகரிப்புகள் அனுப்பப்படுகின்றன. | கம்பனியானது நிதிக் கூற்றுக்களை இறுதி யாக்குவதற்கு முன்னர் இணக்கம் செய்வதற்கும் அவசியமான கணக்கீட்டு சீராக்கல்களை செய்வதற்கும் விசாரணை செய்யப்பட வேண்டும். |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டியவைகள்

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்பு</th><th>முகாமைத்துவத்தின் கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(அ)</td><td>ரூபா 234.5 மில்லியன் தொகையான இறக்கல் மற்றும் தரித்தல் வியாபார கடன்பட்டோர் (சர்வதேச) அறவிடப்படாமல் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.</td><td>கீழே காட்டப்பட்ட நிலுவையானவிருக்கின் பெறுமதியில் 365 நாட்களிற்கும் அதிகமானவை காலத்தையுயைவர் மொத்த கடன்பட்டோர் 95 சதவீதத்தை கொண்டிருந்தது.
<table>
<tr><th>நிறுவனம்</th><th>பெறுமதி<br>ரூபா மில்</th><th>தற்போதைய நிலை</th></tr>
<tr><td>ஏரோ லங்கா</td><td>221.8</td><td>AMC ஆல் அனுமதி வழங்கப்பட்டது, தற்போது இந்த விடயம் முடிவில்லாமல் சட்டப்பிரிவில் உள்ளது.</td></tr>
<tr><td>இலங்கை விமான படை</td><td>2.6</td><td>SLAF இடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு தலையிடு செய்ய அமைச்சிற்கு எழுதப்பட்டது.</td></tr>
<tr><td>சிறீலங்கன் எயாலைன்</td><td>2.6</td><td>தீர்ப்பனவுகளை கோரி கணக்கு கூற்று மற்றும் கடிதங்களுடன் ஒழுங்கான நினைவுட்டல்களையும் நாங்கள் அனுப்பியிருந்தொம்.</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>227.1</td><td></td></tr>
</table>
</td><td>நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரின் அறவீட்டின் சாத்தியத் தன்மை கம்பனியின் சட்டப் பிரிவின் உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>ரூபா 65.1 மில்லியன் தொகையான இறக்கல் மற்றும் தரித்தல் வியாபார கடன்பட்டோர் (உள்நாட்டு) அறவிடப்படாமல் 1 முதல் 5</td><td>கீழே காட்டப்பட்ட நிலுவையானவிருக்கின் பெறுமதியில் 365 நாட்களிற்கும் அதிகமானவை காலத்தையுயைவர் மொத்த கடன்பட்டோர் 95 சதவீதத்தை</td><td>நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரின் அறவீட்டின் சாத்தியத் தன்மை கம்பனியின்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.</td><td>கொண்டிருந்தது.<br><table><tr><td>நிறுவனம்</td><td>பெறுமதி<br><br>ரூபா மில்</td><td>தற்போதைய நிலை<br>-------------</td></tr><tr><td>லைன் எயார்</td><td>47.3</td><td>வழக்கு தொடரப்பட்டுள்ளது</td></tr><tr><td>இலங்கை விமான படை</td><td>8.1</td><td>SLAF இடமிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு தலையிடு செய்ய அமைச்சிற்கு எழுதப்பட்டது.</td></tr><tr><td>சிறீலங்கன் எயாலைன்</td><td>7.4</td><td>தீர்ப்பனவுகளை கோரி கணக்கு கூற்று மற்றும் கடிதங்களுடன் ஒழுங்கான நினைவுட்டல் களையும் நாங்கள் அனுப்பியிருந்தொம்.</td></tr><tr><td>மொத்தம்</td><td>62.9</td><td></td></tr></table></td><td>சட்டப் பிரிவின் உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(இ)</td><td>ரூபா 190 மில்லியன் தொகையான வாடகைக் கடன்பட்டோர் அறவிடப்படாமல் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.</td><td>சகல பெறவேண்டியவைகளையும் பிற்போட்ட வட்டியை கொண்டிருந்தது. ஒழுங்கான அடிப்படையில் உரிய வாடிக்கையாளர்களிற்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தது. சகல பெறவேண்டியவைகளையும் சிறீலங்கன் ஏயாலைனிடமிருந்து பெறவேண்டியவை தவிர பிணை வைப்புக்களால் பாதுகாக்கப்பட்டன.</td><td>நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரின் அறவீட்டின் சாத்தியத் தன்மை கம்பனியின் சட்டப் பிரிவின் உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(ஈ)</td><td>ரூபா 1.3 மில்லியன் தொகையான ஏரோபிரிச் கடன்பட்டோர் அறவிடப்படாமல் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.</td><td>சகல பெறவேண்டியவைகளையும் பிற்போட்ட வட்டியை கொண்டிருந்தது. ஒழுங்கான அடிப்படையில் உரிய வாடிக்கையாளர்களிற்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தது. சகல பெற வேண்டியவைகளையும் சிறீலங்கன் ஏயாலைனிடமிருந்து பெறவேண்டியவை தவிர பிணை வைப்புக்களால் பாதுகாக்கப்பட்டன.</td><td>நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரின் அறவீட்டின் சாத்தியத் தன்மை கம்பனியின் சட்டப் பிரிவின் உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | பிரிவின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) ரூபா 196.6 மில்லியன் தொகையான உயரப்பறத்தல் கடன்பட்டோர் அறவிடப்படாமல் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. | 1985 ஆம் ஆண்டிலிருந்து பெற வேண்டியவையாக இருந்தன. கம்பனியால் விமான வழிப்படுத்தல் சேவைகள் தொடங்கிய திகதியிலிருந்து பதிவழிப்பு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. AASL அனது இந்த சேவை வழங்கவதற்காக எந்தவொரு பிணைவைப்பக்களையும் வைத்திருக்கவில்லை. AASL ஆனது தீர்ப்பனவுகளை கோருகின்ற நினைவூட்டல்களை அனுப்பியிருந்ததுடன் அறவீடுகள் மீது அவர்களுடைய தலையீடுகளை வேண்டுகின்ற சிவில் விமான அதிகாரசபையிற்கு கால ரீதியான அறிக்கைகள் அனுப்புகின்றன. | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரின் அறவீட்டின் சாத்தியத் தன்மை கம்பனியின் சட்டப் பிரிவின் உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உயரப்படுத்தல் கடன்பட்டோரிமிருந்து மேலதிக கொடுப்பனவுளில் ரூபா 12.2 மில்லியன் மீளளிக்கப்படாமல் அல்லது சரிசெய்யப்படாமல் நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டிருந்தது. இந்த தொகையில், காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 10.7 மில்லியன் ஒரு அண்டிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. | சகல மேலதிக கொடுப்பனவுகளும் சரிசெய்வதற்கு சம்மதம் வழங்கிய வாடிக்கையாரின் மீதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்ததினால் மீதிகள் இருக்கவில்லை. | நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற கடன்கொடுத்தோர் மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பின்னர் அந்த கடன்கொடுத்தோர் மீதிகளை அகற்றுவதற்கு தேவையான சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.7.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சகல பிரிவுகள் மற்றும் சகல கிளைத் தலைவர்களால் பெறப்பட்டிருந்த | உரிய கிளைத் தலைவர்களுடன் இணைந்து சகல நீண்ட காலம் | வழங்குநர் முற்பணங்கள் உரிய |

| | | |
|---|---|---|
| வழங்குநர் முற்பணங்கள் உரிய ஆண்டு இறுதிக்கு முன்னர் தீர்ப்பனவு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 21.4 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் 1 முதல் 4 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. | நிலுவையாகவிருக்கின்ற வழங்குநர் முற்பணங்களை அகற்றுவதற்கு தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகளை எடுக்கின்றன. | பிரிவுகளிலிரந்து மூலம் மற்றும் ஆதார ஆவணங்களை பெற்ற பின்னர் தாமதாதமில்லாமல் அகற்றப்பட வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2022 சனவரி 14 ஆந்திகதிய 01/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தலிற்கு முரணாக கம்பனியின் பணிப்பாளர் சபை அவர்களுடைய அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சி (மாதாந்தம் சராசரி) உத்தியோகத்தர் எரிபொருள் படியாக 277 உத்தியோகத்தர்களிற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக கொடுப்பனவு ரூபா 67 மில்லியனாக உளளது. | இந்தப் படிகள் அனுமதிக்கப்பட்டு 2015 இலிருந்து செலுத்தப்பட்டது. ஏற்கனவே, அனுமதிக்கப்பட்ட படிகள் மாற்ற முடியாதிருந்தது. உரிய உத்தியோகத்தர்களின் மொத்த வேதனப் பொதிகள் இந்த எரிபொருள் படியுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன. | மேலதிக எரிபொருள் கொடுப்பனவிற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல் அல்லது நிதி அமைச்சிடமிருந்து பெற்ற அறுமதி என்பவற்றுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க PFD சுற்றறிக்கையின் (“கொள்வனவு” நடை முறைக்கான e-GP முறையை பயன்படுத்தல்) 2.6 ஆம் பந்தி | கொள்வனவு நடை முறையின் கீழ் PE களால் செயற்படுத்தப்பட வேண்டுமென திட்ட மிடப்பட்ட சகல கொள்வனவுகளும் 2020 சனவரி 01 முதல் PE களால் படிபடியாக e-GP முறைமை மூலம் செயற் படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொள்வனவு நடை முறைக்காக e-GP முறைமை இன்னமும் கம்பனியால் பின்பற்றப்படவில்லை. | AASL ஆனது 2021.07.01 இல் தொடர் முகாமைத்துவம் மற்றும் நிதி வழங்கலிற்காக ERP முறைமை அமுலாக்கப்பட்டது. நாங்கள் கொள்வனவிற்காக e-GP மற்றும் ERP இரண்டையும் நடைமுறைப்படுத்துவதற்காக பிரச்சனைகளை இனங்கண்டிருந்தோம். இந்த பிரச்சனைகள் e-GP செயலகத்துடன் தொடர்புபட்டதுடன் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றது.இறுதி | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கலந்துரையாடல் ERP ஒருங்கிணைத்த பின்னர் e-GP ஊடாக கொள்வனவு செய்யப்பட இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 3 ஆவது பகுதி நாளது வரையாக்கப்படும். ஒருங்கிணைந்த பகுதி பூர்த்தியாக்கப்பட்டது. AASL ஆனது நாங்கள் செய்கின்றொம் என்றவாறு கொள்வனவு வழங்கல் மற்றும் கொள்வனவு தாள்கள் பதிவேற்றுவதற்கு வேண்டியுள்ளது. | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் பிரிவு 2.2.2(ஆ)V | 2.1 ஆம் பிரிவின் பிரகாரம்; CEO இன் நியமனங்ளை பணிப்பாளர் சபை (BOD) உறுதிப்படுத்தியது. இருப்பினும் தலைவர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் (CEO) பணிகள் உரிய நியதி அல்லது AOA ஊடாக இணைக்கப்பட்டன, உரிய BOD கட்டாயமாக நியதி அல்லது AOA இற்கு திருத்தத்தின் ஊடாக இரண்டு பணிகளாக பிரிப்பதற்கு நடவக்கை தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், CEO ஆனது இன்னமும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேண்டுகை மீளாய்வு செய்யப் பட்டதுடன் 2025/04.02 இல் இடம்பெற்ற COPE குழுவின் பரிந்துரையை கருத்திற்கொண்டு AASl இன் பணிப்பாளர் சபையால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. பின்னர சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு இந்த தீர்மானம் நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களை கருத்திற்கொண்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் செய்யவேண்டியிருந்தது. வரிசை அமைச்சிற்கு கடிதம் முன்வைக்கப் பட்டதுடன் பதிலிற்காக காத்திருக்கின்றோம் | இந்த ஆழுகை இடைவெளி போதிய கணக்களிப்பு, செயற்பாடு, திறமையீனங்கள் மற்றும் பிரமாண இணங்காமை என்பன தொடர்பான ஆபத்தை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூல; (i) பிரிவு 3.2 (i) | கம்பனியானது சபை அனுமதி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயத்தின் அனுமதி, உரிய | எவ்வாறாயினும், COPE ஆல் வழங்கப்பட்ட இடைக்கால அறிவுறுத்தல் பிரகாரம் AASL இன் வரைவு SORP மற்றும் இருக்கின்ற ஆளணி | முகாமைத்துவ செவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயத்திடமிருந்து அனுமதி பெறப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரிகளின் பிரதிநிதித்துவம் மற்றும் உரிய அமைச்சின் பரிந்துரைகள், என்பவற்றுடன் பதவியணி நிலை, ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR), கொடுப்பனவுக் கட்டமைப்பு மற்றும் படிகள் உள்ளடங்கலாக நிலவுகின்ற அவர்களுடைய பதவியணி நிலையை சமர்ப்பிக்க வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியானது ஆட்சேர்ப்புத் திட்டங்களிற்காக சபை அனுமதி மாத்திரம் பெறப்பட்டது. கொடுப்பனவு கட்டமைப்பு மற்றும் படிகள; SOR இன் முழு அனுமதியும் இல்லாமல் 2014 சனவரி 1 இல் நிதி அமைச்சால் அனுமதிக்கப்பட்டிருந்தது. | அவர்களுடைய பாதுகாப்பிற்காக முகாமைத்துவ செவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் உரிய கலந்துரையால்கள் முகாமைத்துவ செவைகள் திணைக்களத்துடன் 2025/05/19 இலிருந்து தொடங்கப்பட்டது. | வேண்டும். |
| (ii) பிரிவு 3.4 | செலுத்தல் கட்டமைப்பு மற்றும் படிகள் முழு SOR ஐ அனுமதிக்காமல் வேலை விபரங்கள், கல்விசார் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுக்கான திட்டங்கள் வடிவமைக்கும் போது ஏனைய சம்பந்தமான விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பயன்பாட்டிலுள்ள தற்போதைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுக்கான திட்டம் (SOR) வேலை விபரங்கள் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டம் உள்ளடக்கியிருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட வேண்டுகைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் படிவத்தின் பிரகாரம் புதிய வரைவு SORPs இற்கு ஒருங்கிணைக்கப்பட்டது. | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) பிரிவு 5.3 | PED செயற்பாட்டு கைநூலின் பிரகாரம், திரண்ட நிதியத்திற்கு வரி பகிரப்பட்ட பின்னர் குறிப்பிடப்பட்ட 30 சதவீத இலாபத்திற்கும் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு | திறைசேரியால் செய்யப்பட்ட வேண்டுகை அடிப்படையில் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்கிலாபம் வெளிப் படுத்தப்பட்டதுடன் இதன்படி அந்த தொகைகள் ஒவ்வொரு | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலான நிதிக் கூற்றுக்கள் மீது (2022, 2023 மற்றும் 2024) விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியால் செலவு வைக்கப்பட்ட உள்ளபடியான தொகைக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் உள்ளன. அதேநேரம் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு ரூபா 16,280.6 மில்லியன் மொத்தமாகும், திரண்ட நிதியத்திற்கு தொடர்ச்சியாக செலவு வைக்கப்பட்ட 45 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,336 மில்லியன் மாத்திரம் கம்பனி செலுத்தியிருந்தது. | ஆண்டிலும் அனுப்பப்பட்டிருந்தது. கடன் சேவை உள்ளடங்க மூலதன மற்றும் செயற்பாட்டுச் செலவினமாக திறைசேரியில் தங்கியிருக்காமல் AASL ஆல் இறுக்கப்பட்டது. AASL ஆனது எதிர்கால செலவினங்களை செய்யும் நோக்கில் நிதி வளங்கள் போதியதாக இருந்தது. 2025 ஆம் ஆண்டிற்காக வருடாந்த மூலதன செலவினப் பாதீடு ரூபா 27 பில்லியனாக இருந்ததுடன் செயற்பாட்டு பாதீடு ரூபா 30 பில்லியனாக உள்ளது. மொத்தம் ரூபா 57 பில்லியனாகும். அதேநேரம் வருமான பாதீடு ரூபா 50 பில்லியனாகும். | |
| (உ) | 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய PED 04/2023 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு மற்றும் கம்பனியால் வழங்கப்பட்ட உள்ளக விஞ்ஞாபனத்தின் 4 ஆம் பிரிவு | 2023 ஏப்ரல் மாதத்தில் கம்பனியானது சுற்றறிக்கை பிரகாரம் ஆண்டு இறுதியில் ஒரு ஊழியரிற்கு ரூபா 125,000 ஆன வருடாந்த மிகையூதியத்திலிருந்து கழிக்கப்பட வேண்டியிருந்த ஒவ்வொருவரிற்கும் ரூபா 50,000 வீதம் 3,589 ஊழியரிற்கு ரூபா 178.8 ஆன மிகையூதிய முற்பணம் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது முற்பணத்திற்கான சீராக்கலை செய்யாடமல் 2025 இற்காக மிகயூதியமாக ரூபா 664.6 மில்லியன் செலுத்தியிருந்தது. மேலும், உரிய சுற்றறிக்கைக்கு முரணாக விடுமுறை காசாக்கலிற்காக ரூபா 514.5 மில்லியன் செலுத்தியிருந்தது. . | 2024/11/19 இல் சபை அனுமதி பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் AASL ஊழியர்களிற்கு இற்கு செலுத்தப்பட்ட விசேட தொகையாக 2023 ஏப்பிரலில் செலுத்தப்பட்ட ரூபா 50,000 மிகையூதிய முற்பணத்தை கருத்திற் கொள்வதற்கு 2024/11/20 இல் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை மேற்குறிப்பிட்ட வேண்டுகையில் அபிப்பிராயம் பெறுவதற்கு அமைச்சு செயலாளருக்கு நெறிப்படுத்தியது. ஆனால் குழுத் தீர்மானம் இன்னமும் பெறப்படவில்லை. எவ்வாறாயினும், 2024 யூனிலிருந்து தவணை அடிப்படையில் முற்பணத்தை அறவிடுவதற்கு சம்மதம் வழங்கியிருந்த ஊழியர்களிடமிருந்து | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாதாந்த சம்பளத்திலிருந்து ரூபா 2,500 அறவிடப்பட்டது. அதே நேரத்தில் மொத்த முற்பணத் தொகை 2023 ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஓய்வுபெற்ற/ இராஜினா செய்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டது. 2025 மார்ச் வரை மொத்த அறவீடு ரூபா 26,510,062.50 ஆக இருந்தது | |
| (ஊ) | வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (SL) இன் 2023 செப்தெம்பர் ஆந் திகதிய AP/238 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகன விபத்து விசாரணைகளிற்கு AASL அளவீடுகளை அமுலாக்குகின்ற பொதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது கம்பனியினுடைய வாகன குழுமத்தில் இடம்பெற்ற 50 வாகன விபத்துக்களிற்காக முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | பங்குதாரரிடமிருந்து ஆவணங்கள்.׃. காசோலைகள் நிலுவையில் உள்ளதுடன் (AASL/ பிரிவுகள்/ காப்புறுதி/ காராஜ் போன்றன) திருத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அரச கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு உரிய கணக்காய்வு ஐய வினாவிற்குரிய பதில்கள் அறிவிக்கப்பட்டமையால் நடைமுறை விலகல்கள் நெறிப்படுத்தப்பட்டன. | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (SL) இன் 2015 மே 12 ஆந் திகதிய AP/203 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர் கடன் திருப்பிச் செலுத்தல் காலப் பகுதி 36 அல்லது 48 மாதங்களாக உள்ளது. எவ்வாறாயினும், அதற்கு முரணாக ரூபா 1.1 மில்லியன் கூட்டுத் தொகையான 11 ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தல்கள் கடந்திருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விலகல்கள் அல்லது தவறான நடத்தை தொடர்பில் ஏழு ஊழியர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய ஊழியர்களிற்காக பின்தொடர் நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன. | சுற்றறிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.9 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுழைவு அனுமதி வழங்குவதிலிருந்து சேகரிக்கப்பட்ட காசு விமான நிலைய முகாமைத்துவப் பிரிவின் முகாமைத்துவ உதவியாளரால் நிதி மோசடியில் ஈடுபட்டிருந்ததை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற மாற்றப்படாத வைப்புக்களாக வங்கி கணக்கிணக்க கூற்றில் ரூபா 14.8 மில்லியன் பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னமும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவ கருத்துரைகளின் பிரகாரம் வழக்கு இன்னமும் விசாரணையில் உள்ளதுடன் மேசடி மீதான நீதி மன்ற வழக்கு செயற்பாட்டில் உள்ளது | உடன்படுவதுடன் அந்த மாற்றப்படாத வைப்புக்கள் சட்ட நடவடிக்கைகள் முடிவுறுத்தப் படாமையால் இன்னமும் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் உள்ளமையாக விடப்பட்டிருந்தது. | சாசு மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நீதி மன்ற வழக்கு இறுதியாக்கிய பின்னர் தேவையான சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

### 1.10 வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இல் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வரீ மதிப்பீட்டு ஆண்டிற்காக வியாபார அல்லது முதலீட்டிலிருந்து தனிநபர் ஒருவரின் வருமானம் கணிப்பிடுகையில் மூலதன தன்மையான செலவினம் கழிக்கப்பட வேண்டியதில்லை. எவ்வாறாயினும் வியாபாரத்திலிருந்து வரி விதிக்க்கூடிய வருமானம் கணிப்பிடுகையில் வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்தல்களிற்காக கம்பனியால் பொது திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,223.3 மில்லியன் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவினமாக அனுமதிக்கப்பட்டதாக கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் வரி விதிக்கக்கூடிய வருமானம் ரூபா 1,223.3 | இந்த விசேட சுத்திகரிப்பு விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் சார்பில் பொது திறைசேரியால் பெறப்பட்ட கடன்களிற்காக மாத்திரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. திருப்பிச் செலுத்தல்கள் திறைசேரிக்கு யுயுளுடு ஆல் செய்யப்பட்டதுடன் திறைசேரி கடன் பெறுவோருக்கு செலுத்தகின்றது. இந்த விசேட சுத்திகரிப்பு கடன் வழங்குவோரிடமிருந்து சேரடியாக AASL ஆல் பெறப்பட்ட கடன்களிற்கு பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான வரி கணிப்பிடும் பொது திறைசேரிக்கு செய்யப்பட்ட கடன் திருப்பிச் செலுத்துதல்களை கழிப்பதற்கு ERD இடமிருந்து முறையான அறுமதி பெற்றப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனால் குறைத்தக் காட்டப்ப ட்டிருந்ததுடன் 2024/2025 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக வருமான வரிப் பொறுப்பு ரூபா 367 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2018 மார்ச் 31 இன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான மூலதன படி பட்டியலின் பிரகாரம், 5% மூலதனப் படி விமான நிலைய கட்டமைப்பிற்காக பிரயோகிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2020/2021 to 2023/2024 ஆண்டின் பொது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்காக கம்பனி 20% கோரியிருந்ததுடன; 2024/2025 இல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்காக சரியாக 5 % பிரியோகிக்கப்பட்டது. வருமான வரி மதிப்பீடு கணிப்பீடு செய்கையில் கம்பனியானது இரண்டு அடிப்படையிலும் மூலதன படி கொருவதற்காக பயன்படுத்தியிருந்ததுடன் 2024/2025 ஆம் ஆண்டிற்காக முறையே ரூபா 62.5 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால் வரிவிதிக்க் கூடிய வருமானம் ரூபா 62.5 மில்லியனால் மூலதனப்படி அதிகரித்துக் கூறப்பட்டிருந்ததுடன் 2024/2025 ஆம் ஆண்டிற்கான (62,507,737 X 30%) வரிப் பொறுப்பு மற்றும் வரிச் செலவினம் என்பன ரூபா 18.7 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இன் நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டவாறு 2020-2021 முதல் 2023-2024 வரையான காலப்பகுதிக்காக கொன்வனவு செய்யப்பட்ட சொத்தக்களிற்காக வகைப்படுத்தல் சீராக்கல் பிரயோகிக்கப்பட்டிருந்தது. | வரி சட்டத்துடன் இணங்குதலை பேணுவதற்கு வரிப் பொறுப்பு கணிப்பீட்டின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் . கம்பனியின் நிதி நிலைமையின் உண்மை மற்றும் நியாயத்தின் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் போது (குறிப்பு 11-ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பட்டியல்) பொறி, இயந்திரம், பொறி மற்றும் உபகரணங்களின் சேர்ப்பனவுகள் ரூபா 380 மில்லியனாக இருந்ததுடன் பட்டியல் பிரகாரம் சொல்லப்பட்ட மூலதன படி ரூபா 363.7 மில்லியனாக இருந்தது. ஆகவே, 2024 ஆம் ஆண்டின் பொது ஆதனம், பொறி மற்றும் | பிரதானமாக இந்த சுத்திகரிப்பு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்துடன் இணைந்துள்ளது. மோட்டார் வாகனங்களிற்கான மூலதன படி அனுமதிக்கப்படாது இருந்தும் வியாபார நோக்கத்திற்காக முழுயைாக பயன்படுத்தப்பட்டதென குறிப்பிடப்பட்டது. இந்த வாகனம் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வியாபார | கம்பனியானது வரி அறிக்கைகளை இறுதியாக்க முன்னர் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் கட்டுப்பாட்டு பொறிமுறை அல்லது மூலதன படி கணிப்பீட்டில் பயன்படுத்தி இலக்கங்களை |

உபகரணங்களின் சேர்ப்பனவின் வித்தியாசம் ரூபா 16.3 மில்லியனாக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது வரி வருமானம் ரூபா 3.2 மில்லியனாக(16,303,409x 20%) இருந்தது என அவதானிக்கப்பட்டது.

நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டதாக வகைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. இது வரிக் கணிப்பீட்டில் மூலதன படிக் கோரிக்கையிலிரந்து தவிர்க்கப்பட்டது.

பரீட்சிபதற்கான பட்டியல் என்பன அமுலாக்கப்பட வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,107,551,033 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 28,121,654,931 ஆக இருந்தது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 7,014,103,898 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி வருமானம் ரூபா 2,685,223,629 ஆல் அதாவது 26 சதவீதம் அதிகரித்தமை, நிர்வாக மற்றும் தாபனச் செலவினத்தில் ரூபா 5,256,073,518 ஆல் அல்லது 28 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் நிதிக் கிரயம் ரூபா 290,459,919 ஆல் அதாவது 65 சதவீதம் அதிகரித்தமை மற்றும் நாணயமாற்று இலாபத்தில் ரூபா 2,257,737,486 அதாவது 37 சதவீதம் வீழ்ச்சியடைந்தமை என்பன இம் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விபரங்கள் | 2024 | 2023 | முரண் | முரயின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| **வருமானம்** | **43,750,204,235** | **38,245,784,487** | **5,504,419,748** | **14.3** |
| - விமான பயணம் வருமானம் | 7,767,625,053 | 7,575,143,036 | 192,482,017 | 2.5 |
| - விமான பயணமல்லாத வருமானம் | 35,982,579,182 | 30,670,641,452 | 5,311,937,730 | 14 |
| **ஏனைய வருமானம்** | **147,125,607** | **130,045,148** | **17,080,459** | **12** |
| **நிதி வருமானம்** | **7,742,971,965** | **10,428,195,594** | **(2,685,223,629)** | **(26)** |
| **நிர்வாக மற்றும் தாபனச் செலவினம்** | **24,317,232,283** | **19,061,158,765** | **5,256,073,518** | **22** |
| - உத்தியோகத்தர் கிரயம் | 10,072,258,508 | 7,467,364,871 | 2,604,893,637 | 26 |
| - திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 1,573,885,418 | 1,880,496,451 | (306,611,033) | (19) |
| **நிதிக் கிரயம்** | **2,515,661,418** | **2,225,201,499** | **290,459,919** | **13** |
| **நாணயமாற்று இலாபம் /(நட்டம்)** | **3,863,676,146** | **6,121,413,632** | **(2,257,737,486)** | **36.8** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது 14 சதவீத வளர்ச்சியை பிரதிநிதித்துப்படுத்துகின்ற கம்பனியினுடைய வருமானம் ரூபா 5,504,419,748 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டிற்கான இலாபம் ரூபா 7,014,103,898 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. வருமானம் உயர்வாக இருப்பினும் இலாபத் தன்மையில் இந்தச் சரிவு ரூபா 2,604,893,637 தொகையான உத்தியோகத்தர் கிரயத்தில் அதிகரிப்பு பிரதானமாக குறிப்பிடத்தக்களவு பங்களித்திருந்தது.

## 2.3 விகித பகுப்பாய்வு

| விகிதங்களின் வகை | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.08 | 3.31 | 4.23 | 5.98 | 7.68 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.03 | 3.2 | 4.1 | 5.88 | 7.55 |
| புரள்வு விகிதம் (தடவைகள்) | 1.46 | 1.39 | 2.44 | 1.66 | 1.38 |
| தேறிய இலாப / (நட்ட) விகிதம் % | 48 | 73 | 17 | -26 | -31 |
| பங்கொன்றிற்கான அடிப்படை (நட்டம்) / உழைப்பு (ரூபா) | 105,537 | 140,606 | 24,013 | -10,417 | -12,522 |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 9 | 15 | 3 | -2 | -2 |
| ஒரு பயணிக்கான வருமானம் (ரூபா) | 4917 | 5,083 | 5,024 | 5,234 | 3,373 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2020 இலிருந்து 2024 வரை கம்பனியினுடைய திரவத்தன்மை நிலைமை படிப்படியாக வீழ்ச்சியை காட்டியிருந்தது. வரை நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் இந்தக் காலப்பகுதியின் பொது படிப்படியாக குறைவடைந்திருந்தது. விசேடமாக நடைமுறை விகிதம் 2020 இல் 7.68 இலிருந்து 2024 இற்கு 3.08 இறற்கு வீழ்ச்சியடைந்திரந்தது அதேநேரம் விரைவு சொத்து விகிதம் குறித்த அதே காலத்திற்குள் 7.55 இலிருந்து 3.03 இற்கு குறைவடைந்திருந்தது. கம்பனியானது முன்னைய அண்டினைவிட அதன் குறுகிய கால பொறுப்புக்களை மேவுவதற்கு எளிதாக கிடைக்க கூடிய சொத்துக்கள் குறைவாக இருந்தது.

(ஆ) ஒரு பயணிக்கான வருமானம் 2021 இலிருந்து 2024 வரை அண்ணளவாக ரூபா 4,900 முதல் ரூபா 5,200 வரை ஒப்பீட்டளவில் நிலையான போக்கை காட்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது புரள்வு விகிதம் 2023 இல் 1.39 தடவைகளிலிருந்து 2024 இல் 1.46 தடவைகளிற்கு அதிகரித்திருந்தது.

(ஈ) பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்புகள் (EPS) 2023 இல் ரூபா 140,606 இலிருந்து 2024 இலிற்கு ரூபா 105,537 இற்கு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இது இன்னமும் பங்கொன்றிற்கு நிலைபேறான உழைப்பு தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
